**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

**Deposition of Witness for : P.W.11**

**Name : Dr.ஆர்.வித்யா**

**Father's Name : .**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.11.2023.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது ஆரணி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 20.10.2021 அன்று இரவு 1.30 மணிக்கு நான் பணியில் இருந்தபோது புருஷோத்தமன், வயது 40 என்பவரை அவருடைய உறவினர் சங்கர் என்பவர் அழைத்துக்கொண்டு வந்தார். 20.10.2021 அன்று தன்னைஒருவர் வீட்டில் பெட்ரோல் சுற்றி டயரை பற்ற வைத்து எரித்துவிட்டதாக கூறினார்.**

அவரை நான் பரிசோதித்தபோது அவர் சுய நினைவுடன் இருந்தார். அவருக்கு முகம், இரண்டு கைகள், நெஞ்சு, வயிறு இடது தொடை மேல்பக்கம் எரிந்த நிலையில் இருந்தது. வலது காலில் தொடு வலியும், மாறுபாடும் இருந்தது. 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட எரிந்த காயங்கள் உடன் இருந்தார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். விபத்து பதிவேடு பதிவு செய்தேன். <u>விபத்து பதிவேடு அ.சா.ஆ.9</u>. இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரணை செய்தபோது, ஒரு நபர் பெட்ரோல் ஊற்றி டயரை பற்ற அதன் மூலம் தீப்பற்ற வைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். டயர் வைத்து பற்ற வைத்திருந்தால் டயருடைய எரிந்த மீதம் உடலில் இருக்கும் என்றால் என்னிடம் பரிசோதனைக்கு வந்த உடலில் நான் பார்க்கவில்லை.

தீக்காயத்துடன் வந்த நபருக்கு பொதுவாக வலி நிவாரணி ஊசி போடுவதுண்டு என்றால் சரி தான். வந்த நபருக்கு போடப்பட்டது. 70 சதவீத தீக்காயங்கள் உடன் வந்த நபருக்கு வலி நிவாரணி ஊசி போடும்போது அந்த நபர் மயக்க நிலையில் தான் இருப்பார் என்றால் வலி நிவாரணிக்கு மயக்கம் வராது.

ஒரு நபர் பெட்ரோலை ஊற்றி டயரை எரித்து, எரிந்த டயர் மூலம் தீ வைத்தார் என்ற சங்கதியானது போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் தான் அ.சா.ஆ.9ல் எழுதப்பட்டது என்றால் சிகிச்சைக்கு

**தீக்காயங்கள் உடன் வந்த நபர் தான் சொன்னார்.**

**(சாட்சியிடம் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் மருத்துவமனை தகவலுக்கான சீட்டை காட்டி கேள்வி கேட்டதற்கு நீதிமன்றம் கேள்வியை பதிவு செய்ய மறுத்தது. காரணம், அதில் மருத்துவரின் கையொப்பம் இல்லை என்பதால். கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் உதவி மருத்துவர் என்ற முத்திரை உள்ளது என்ற வாதமானது நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மேற்கண்ட வாதம் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.)**

**வந்த நோயாளி சுயநினைவுடன் இருந்தார் என்பதை போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் தான் நான் பதிவு செய்தேன் என்றால் வந்த நோயாளி சுய நினைவுடன் தான் இருந்தார் என்பதை நோயாளியை பரிசோதனை செய்ததின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். போலிசார் சொல்லிக்கொடுக்கவில்லை.**

**நான் பார்க்கும்போது காயங்கள் தலையில் இருந்து தொடை வரை காணப்பட்டது என்றால் சரி தான். ஒரு நபர் எரியும் அடுப்பில் தலைக்குப்புற விழும்போது காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சம்பவம் நடந்த விதம் குறித்து காயங்களை வைத்து சொல்ல முடியாது. ஆனால் வாய்ப்புள்ளது.**

**விபத்து பதிவேடு போலிசார் விசாரித்தபோது பதிவு செய்தேனா என்றால் நோயாளி வந்தபோதே பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினமே போலிசார் வந்து வாங்கி சென்றுவிட்டார்கள். என்னுடைய பணி நேரத்திற்குள்ளாகவே வாங்கி சென்று விட்டார்கள் என்றால் சரி தான்.**

**<u>நீதிமன்ற கேள்வி 1.</u> ஒரு நபர் நிலைதடுமாறி எரியும் அடுப்பில் தலைக்குப்புற விழும்போது தொடை காயம் ஏற்படும் வரை அந்த நபர்**

**அடுப்பில் இருக்க வாய்ப்புண்டா?**

**பதில் - வாய்ப்பு இல்லை.**

**<u>நீதிமன்ற கேள்வி 2</u> - ஒரு நபர் நன்றாக குடித்த நிலையில் இருக்கும்போது தொடை எரியும் வரை எரியும் அடுப்பில் இருக்க வாய்ப்புண்டா?**

**பதில் - குடித்த நபருக்கு நினைவு இருக்கும். தொடை எரியும் வரை அடுப்பில் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை.**

**<u>நீதிமன்ற கேள்வி 3</u> - ஒரு நபர் தற்கொலை செய்துக்கொள்ளும் எண்ணத்தில் எரியும் அடுப்பில் விழுந்தால் தொடை எரியும் வரை எந்தவொரு சத்தமும் இல்லாமல் எரியும் அடுப்பில் இருப்பதற்கு வாய்ப்புண்டா?**

**பதில் - வாய்ப்பு இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.